29.01.2021 அன்று காலை 11.30 மணியளவில் நடை பெற்ற சாதாரணக் கூட்டம்: தலைமை: திரு. L. பாலகிருஷ்ணன், எம்.எஸ்.சி. தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் மேலூர் நகராட்சி



01

மன்றப்பொருள் எண்.01
தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டுத்திட்டம் 2018–2019ன் கீழ் மேலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பழுதடைந்த சாலைகளை சீரமைக்க ரூ.300.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு ந,க,எண்.12981/2018/இ3 நாள்.17.07.2018ன் படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு 26.09.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி நடைப்பெற்றதை 08.09.2018 அன்று Deccan Chroeiclre மற்றும் மாலை முரசு நாளிதழ்களில் விளம்பரம் செய்தமைக்கான விளம்பரக் கட்டணம் ரூ.57383/–ஐ அக்கார்டு விளம்பர நிறுவனம் ,சென்னைக்கு வழங்க அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–1. மன்றம் அனுமதிக்கலாம்.
2.தனி அலுவலர் முன்அனுமதி பெற்று தொகை வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

01 — அனுமதிக்கப்பட்டது. (கையொப்பம்) 29.1.21

மன்றப்பொருள் எண்.02
மேலூர் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய சொத்துவரி, குடிநீர்கட்டணம், தொழில்வரி மற்றும் குத்தகை தொடர்பான வணிக வளாக கடைகளுக்கான வாடகை போன்ற வரி மற்றும் வரியில்லா இனத்தின் கேட்புத் தொகையினை உடனடியாக செலுத்த கேட்டு ஒலி பெருக்கி வைத்து ஆட்டோவில் விளம்பரம் செய்ய நாள் 1க்கு ஏற்படும் உத்தேச செலவினம் ரூ.3000/– மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலக குறிப்பு–அனுமதிக்கலாம்.

02 — அனுமதிக்கப்பட்டது. (கையொப்பம்) 29.1.21

மன்றப்பொருள் எண்.03
மேலூர் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய சொத்துவரி, குடிநீர் கட்டணம் மற்றும் வணிக வளாக கடைகளுக்கு செலுத்த கேட்டு நகரில் ஒலி பெருக்கி வைத்து ஆட்டோ மூலம் விளம்பரம் செய்ய நாள் 1க்கு வாடகை குறிப்பிட்டு 07.01.2021ம் தேதிய வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | நாள் 1க்கு வாடகை |
|---|---|---|
| 1. | எஸ்.டி.எஸ்.எலக்ட்ரானிக்ஸ், 204,பெரிய கடை வீதி, மெயின்ரோடு, மேலூர் | ரூ.3100/– |
| 2. | ஜெ.பி.புக் பைண்டிங &பிரிண்டிங, எலக்ட்ரானிக்ஸ், செட்டியார் தெரு, மேலூர் | ரூ.2800/– |

அலுவலக குறிப்பு–வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள ஜெ.பி.புக் பைண்டிங &பிரிண்டிங, எலக்ட்ரானிக்ஸ், நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியை ஏற்று நகர் மன்றத்தின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

03 — அனுமதிக்கப்பட்டது. (கையொப்பம்) 29.1.21

Scanned with CamScanner

மன்றப்பொருள் எண்.04

பேருந்து நிலையம் உணவகம் பொது ஏலம் நடத்தப்பட்டது தொடர்பாக, சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் திரு.ஆர்.கே.தமிழ்செல்வம் என்பவரால் தொடரப்பட்ட வழக்கு எண்.டபிள்யூ.பி.எண்.18839/2020 தொடர்பாக திரு.எ.பி.இளங்கோ என்பவரால் கேட்கப்பட்ட வழக்கு தொடர்பான கேள்விகளுக்கு உரிய பதில் தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வகைக்க வழக்கு கட்டணமாக ரூ.7500/– வழங்க மன்ற் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு– அனுமதிக்கலாம். அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தின் முன்அனுமதி பெற்று அரசு வழக்கறிஞருக்கு மேற்படி தொகை வழங்கியதை மன்றம் அங்கிகரிக்கலாம்.

04. அனுமதிக்கப்பட்டது 29/1/21

மன்றப்பொருள் எண்.05

2020–2021 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்ட ஒதுக்கீட்டின் கீழ் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களின் நடவடிக்கைகள் உத்திரவின் படி ந.க.எண்.802/2020/டி2 நாள்.30.11.2020 நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.அதன் படி கீழ்கண்ட பணிகளை மேற்கொள்ளவும், ஒப்பந்தபுள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| வ.எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு(ரூ) |
|---|---|---|
| 1. | மேலூர் சிவகஙகை சாலை ஆர்.சி.பள்ளி அருகில் பயணியர் நிழற்குடை அமைத்தல் | 600000/– |
| 2. | மேலூர் அழகர் கோவில் சாலை பிள்ளையார் கோவில் அருகில் பயணியர் நிழற்குடை அமைத்தல் | 600000/– |

அலுவலகக்குறிப்பு–1. அனுமதிக்கலாம்.

2. தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

05. அனுமதிக்கப்பட்டது. 29/1/21

மன்றப்பொருள் எண்.06.

நகராட்சி உரக்கிடஙகில் சேகரமாகும் குப்பைகளை வேறு இடத்திற்கு கொண்டு செல்வதற்கும், குப்பைகளை கொண்டு செல்ல ஏதுவாக வழியில் கிடஙகும் குப்பைகளை சீர் செய்து வேறு அடத்திற்கு கொண்டு செல்லவும், ஜெசிபி, டிராக்டர்,ஹிட்டாச்சி போன்ற வாகனஙகளை வாடகைக்கு அமர்த்த தனி அலுவலர் அவர்களின் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட இரு நிறுவனஙகளிலிருந்து விலைப்புள்ளி பெறப்பட்டுள்ளது.

| வ.எண் | பெயர் மற்றும் முகவரி | வாகனம் | வாடகை ரூ.(1மணி நேரத்திற்கு) |
|---|---|---|---|
| 1. | அ.3094 வேளாண்மை பொறியியல் சேவை கூட்டுறவு மையம் லிமிடெட்,மேலூர் | ஜெசிபி<br>டிராக்டர்<br>ஹிட்டச்சி | 1100/–<br>5200/–<br>3600/– |
| 2. | செல்லம்பட்டி அக்ரோ எஞ்சினியரிங மற்றும் சர்வீஸ் கோ–ஆப்பரேட்டிங சென்டர் லிமிடெட்,செல்லம்பட்டி | ஜெசிபி<br>டிராக்டர்<br>ஹிட்டச்சி | 1200/–<br>5400/–<br>3700/– |

மேற்க்கண்டவாறு பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழஙகிய வேளாண்மை பொறியியல் சேவை கூட்டுறவு மையம் லிமிடேட் மேலூர் அவர்களுக்கு பணி உத்திரவு வழஙக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு–1. மன்றம் அனுமதிக்கலாம்

2.பொது சுகாதாரத்தின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழஙகியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

06. அனுமதிக்கப்பட்டது. 29/1/21

Scanned with CamScanner

மன்றப்பொருள் எண்.07

இந்நகராட்சி மலம்பட்டி உரக்கிடஙகில் சேகரமாகிய பழைய குப்பைகளை Biomining மூலமாக தனியார் நிறுவனம் அப்புறப்படுத்தி வருகிறது. நகரில் சேகரமாகும் மக்கும் கழிவுகள் மொத்தம் 11 மெ,டன் ஆகும். 6டன் மட்டுமே Mce மற்றம் OCCக்கு கொண்டு செல்லப்படுகிறது. மீதமுள்ள மக்கும் ,மக்காத கழிவுகள் நகராட்சி உரக்கிடஙகில் கொட்டி வைக்கப்படுவதால் அதிக அளவில் சேர்ந்து வாகனஙகள் செய்ய இயலாத நிலை உள்ளதால் மாற்று இடத்திற்கு கொண்டு செல்லவும் புதிய குப்பைகளை கொட்டுவதற்கு லாரி செல்ல ஏதுவாக வழிகளை சீர் செய்யவும் ஜெசிபி, டிராக்டர் மற்றும் ஹிட்டாச்சி வாகனஙகளை வாடகைக்கு அமர்த்தி பணி செய்ய வேண்டியுள்ளதால்அவ்வாகனஙகளை பணியில் அமர்த்த விலைப்புள்ளி கோரவும், அவசர அவசியம் கருதி பணி மேற்க்கொள்ளவுள்ளதால் அப்பணிககான உத்தேச செலவின ரூ.5,00,00/– மன்றத்தின் முன் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– அ. மன்றம் அனுமதிக்கலாம்

ஆ. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்ற விலைப்புள்ளி கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந,க.எண்.1848/2021/எச்1



07.

அனுமதிக்கப்பட்டது.

[signature] 29/11/21

மன்றப்பொருள் எண்.08

சிறப்பு சாலைகள் திட்டம் (Special Road Programme) 2020–21–ம் கீழ் ரூ.1100.00இலட்சம் மதிப்பீட்டில் கீழ்க்கண்ட சாலை பணிகள் மேற்கொள்ள 12.01.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. லட்சத்தில் | மதிப்பீடு ரேட்டைவிட குறைந்த அளவு ஒப்பந்தப் புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் சதவீதம் | மதிப்பீடு ரேட்டை விட அதிக அளவு ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு 1, 16, 24 ல் பல்லவராயன்பட்டி மெயின்ரோடு, குமார் நகர், 1, 2, 3, 4 வது குறுக்கு தெரு, காந்தி நகர் மற்றும் தெற்குப்பட்டி இ.பி.ஆபிஸ் ரோடு ஆகிய தெருக்களில் தார்சாலை அமைக்கும் பணி | 200.00 | திரு. சி.அடைக்கலம் 5.18 % அதிகம் | திரு.ஆர்.எம்.எல்.மாரி. 6.63% அதிகம் |
| 2. | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு 1, 8,16 ல் முத்தமிழ் நகர் மெயின் ரோடு, 1, 2, 3 ஆகிய குறுக்கு தெருக்கள், பல்லவராயன்பட்டி 1,2 குறுக்கு தெரு மூவேந்தர் நகர் , ஸ்டார் நகர் ஆகிய தெருக்களில் தார்சாலை அமைக்கும் பணி. | 200.00 | ஸ்ரீசக்ரா கன்ஸ்ட்ரக்சன் 5.14 % அதிகம் | பவதாரணி பில்டர்ஸ் 7.28% அதிகம் |
| 3. | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு 4, 7, 8,19, 23,26ல் பேங்க் ரோடு, அண்ணா காலனி மெயின் மற்றும் 1, 2,3,4,5வது குறுக்கு தெருக்கள், எம்.சி.சி.செட், ஆண்கள்மேல்நிலைப்பள்ளி பின்புறம், ஜெயம் மருத்துவமனை குறுக்குத்தெரு , பாலமுருகன்கோவில் பின்புறம், வீரசூடாமணி கண்மாய், தமிழ் மொபைல்ஸ் பின்புறம், சிவகங்கை ரோடு, காந்திஜி பூங்கா ரோடு, மில்கேட் சத்தியா நகர் ஆகிய தெருக்களில் சிமெண்ட் கல்தளம் அமைக்கும் பணி. | 200.00 | ஸ்ரீசக்ரா கன்ஸ்ட்ரக்சன் 4.99 % அதிகம் | பவதாரணி பில்டர்ஸ் 9.04% அதிகம் |



08.

அனுமதிக்கப்பட்டது

29/1/21

| | | | | |
|---|---|---|---|---|
| 4. | இந்நகராட்சிக்கட்பட்ட வார்டு 1, 18, 24, 26ல் திருவள்ளுவர் நகர், மில்கேட் இ.பி.ஆபிஸ் முதல் மேலுருஞ்சி கண்மாய், பழையசுக்காம்பட்டி, சொக்கர்ஊரணி ஆகிய தெருக்களில் தார்சாலை அமைக்கும் பணி | 200.00 | ஸ்ரீசக்ரா கன்ஸ்ட்ரக்சன் 5.16 % அதிகம் | பவதாரணி பில்டர்ஸ் 6.88% அதிகம் |
| 5. | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு 12, 16, 24, 26 ல், கருத்தபுளியம்பட்டி மயானம், போலீஸ் ஸ்டேசன் ரோடு, மில்கேட் காலனி முதல் பைபாஸ் முடிவு, ஜோதி உரக்கடை மற்றும் ஜோதிஉரக்கடை 2வது தெரு, எஸ்.எம். நகர், வலையன்குளம் , விஸ்வகர்மான தெரு ஆகிய தெருக்களில் தார்சாலை அமைக்கும் பணி | 200.00 | ஸ்ரீசக்ரா கன்ஸ்ட்ரக்சன் 5.16 % அதிகம் | திரு.ஆர்.எம்.எல்.மாரி. 5.93% அதிகம் |
| 6. | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு 21, 27ல் மலம்பட்டி குறுக்கு தெருமற்றும் காலனி தெரு, மில்கேட் வடக்கு தெருக்களில் தார்சாலை அமைக்கும் பணி. | 100.00 | ஸ்ரீசக்ரா கன்ஸ்ட்ரக்சன் 5.17 % அதிகம் | திரு.ஆர்.எம்.எல்.மாரி. 6.67% அதிகம் |
| | மொத்தம் | 1100.00 | | |

பெறப்பட்ட மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. வ.எண்.1ல் கண்ட பணிக்கு கலம் எண்.4ல் கண்ட ஒப்பந்தக்காரர் சி.அடைக்கலம் என்பவர் மதிப்பீடு ரேட்டை விட 5.18 % அதிகமாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம். அதிகமாக ஒப்பந்தப்புள்ளி வழஙகிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழஙகவும் மன்றம் அனுமதிக்கலாம்.
2. வ.எண்.2ல் கண்ட பணிக்கு கலம் எண்.4ல் கண்ட ஒப்பந்தக்காரர் ஸ்ரீசக்ரா கன்ஸ்ட்ரக்சன் மதிப்பீடு ரேட்டை விட 5.14 % அதிகமாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம். அதிகமாக ஒப்பந்தப்புள்ளி வழஙகிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழஙகவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. வ.எண்.3ல் கண்ட பணிக்கு கலம் எண்.4ல் கண்ட ஒப்பந்தக்காரர் ஸ்ரீசக்ரா கன்ஸ்ட்ரக்சன் மதிப்பீடு ரேட்டை விட 4.99 % அதிகமாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம். அதிகமாக ஒப்பந்தப்புள்ளி வழஙகிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழஙகவும் மன்றம் அனுமதிக்கலாம்.
4. வ.எண்.1ல் கண்ட பணிக்கு கலம் எண்.4ல் கண்ட ஒப்பந்தக்காரர் ஸ்ரீசக்ரா கன்ஸ்ட்ரக்சன் மதிப்பீடு ரேட்டை விட 5.16 % அதிகமாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம். அதிகமாக ஒப்பந்தப்புள்ளி வழஙகிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழஙகவும் மன்றம் அனுமதிக்கலாம்.
5. வ.எண்.2ல் கண்ட பணிக்கு கலம் எண்.4ல் கண்ட ஒப்பந்தக்காரர் ஸ்ரீசக்ரா கன்ஸ்ட்ரக்சன் மதிப்பீடு ரேட்டை விட – 5.16 % அதிகமாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம். அதிகமாக ஒப்பந்தப்புள்ளி வழஙகிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழஙகவும் மன்றம் அனுமதிக்கலாம்.
6. வ.எண்.3ல் கண்ட பணிக்கு கலம் எண்.4ல் கண்ட ஒப்பந்தக்காரர் ஸ்ரீசக்ரா கன்ஸ்ட்ரக்சன் மதிப்பீடு ரேட்டை விட 5.17 % அதிகமாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம். அதிகமாக ஒப்பந்தப்புள்ளி வழஙகிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழஙகவும் மன்றம் அனுமதிக்கலாம்.

Scanned with CamScanner

ன்றப்பொருள் எண்.09

மேலூர் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கும் டி.என்.59 பிஎஸ்.9536 வண்டி டம்பர் பிளேசர் வாகனத்திற்கு தகுதிச்சான்று பெற புதிதாக 6 டயர்கள் வாங்க உள்ளூர் வெளியூர் நிறுவனங்களில் விலைப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட இரு நிறுவனங்களில் இருந்து விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

1.ஹீசைன் டயர்ஸ், மதுரை மெயின் ரோடு, மேலூர். — ரூ.67450/–

2.சன் ஆட்டோ ஸ்பேர்ஸ், மதுரை மெயின் ரோடு, மேலூர். — ரூ.68797/–

மேற்கண்ட இரு நிறுவனங்களில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய ஹீசைன் டயர்ஸ் நிறுவனத்திற்கு வியோக உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.3027/2020/எச்1

09. அனுமதிக்கப்பட்டது

மன்றப்பொருள் எண்.10.

மேலூர் நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு பயன்பாட்டிற்கு பிளிச்சிங பவுடர் 3 டன் மற்றும் பினாயில் 3000 லிட்டர் தேவைப்படுவதால் அவற்றை விநியோகம் செய்ய உள்ளூர் மற்றும் வெளியூர் நிறுவனங்களிலிருந்து விலைப்புள்ளி கோரவு, அத்தியாவசிய செலவினமாக இருப்பதால் அவற்றிற்கான உத்தேச செலவினம் ரூ.5/–லட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு–

அ.மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ.அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.40/2021/எச்1

10. அனுமதிக்கப்பட்டது

மன்றப்பொருள் எண்.11.

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவின் தேவைக்கான பிளிச்சிங பவுடர், பிளாயில் வியோகம் செய்ய விலைப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட இரு நிறுவனங்களில் இருந்து விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | பெயர் மற்றும் முகவரி | பொருட்கள் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | ஸ்ரீதாய்மூகாம்பிகை எக்ஸ்போர்ட், 4,பூஙகாநகர், பொள்ளாட்சி | பினாயில்(1லி)<br>பிளிச்சிங பவுடர்(1கிலோ) | 85/–<br>53/– |
| 2. | ஸ்ரீபாலாஜி மார்க்கெட்டிங, திருமலை இல்லம், 9–5–1,பஜார் தெரு, அய்யாம்பாளையம், திண்டுக்கல் | பினாயில்(1லி)<br>பிளிச்சிங பவுடர்(1கிலோ) | 105/–<br>65/– |

மேற்க்கண்ட இரு நிறுவனங்களில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய ஸ்ரீதாய் மூகாம்பிகை எக்ஸ்போர்ட் நிறுவனத்திற்கு விநியோக உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– அ.மன்றம் அனுமதிக்கலாம்

ஆ.அவசர அவசியம் கருதி தனி அலுவரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.040/2021/எச்1

11. அனுமதிக்கப்பட்டது



Scanned with CamScanner

மன்றப்பொருள்.12

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.4,7,8,3,15,16,24ல் அமைந்துள்ள மில்கேட் ஊர்காவலன் புளியமரம், அக்பர் கலப்பை பின்புறம் , அழகர் கோவில் சாலை, அண்ணா காலனி, முகமதியாபுரம், மூவேந்தர் பண்பாட்டு கழகம் மற்றும் பாலமுருகன் கோவில் பின்புறம் கோட்டை கிணறு தெரு ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால்வாய் பிரதான சாலையின் குறுக்கே செல்கிறது. அதனை கடக்க வழி இல்லாததால் அப்பகுதி மக்களின் கோரிக்கையின் படி அப்பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சாலையின் குறுக்கே பாலம் அமைக்கும் பணிக்கு ரூ.8.30 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டமைக்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு–1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1635/2020/அ1

12 தீர்மானிக்கப்பட்டது.

மன்றப்பொருள்.13

மேலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3,4,7,8,15,16,24ல் மில்கேட், ஊர்காவலன் புளியமரம், அக்பர் கலப்பை பின்புறம், கோட்டை கிணறு தெரு ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு கீழ்க்கண்டவாறு விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன.

1. திருமதி.பதுருனிசா –0.20 குறைவு
2. திரு.தவப்பாண்டி – 1.30 அதிகம்.

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த விலைப்பட்டியல் வழங்கயுள்ள திருமதி.பதுருனிசா அவர்களின் ஒப்பந்தபுள்ளியை அனுமதிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1. அனுமதிக்கலாம்.

2.தனி அலுவலரின் முன் அனமதி பெற்று வேலை உத்திரவு வழஙகியமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

13 தீர்மானிக்கப்பட்டது.

மன்றப்பொருள் எண்.14

பொதுசுகாதாரப் பிரிவில் மனிதக் கழிவுகளை மனிதனே அகற்றுவது தடைச்சட்டம் மற்றும் அவர்களுக்கான மறுவாழ்வுச் சட்டம் தொடர்பாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் 12'10 அளவில் பேனர்கள் தயார் செய்து நிறுவிட தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டம் 1921 பிரிவு 15ன் கீழ் விலைப்புள்ளி கோரி பணிகள் மேற்கொண்டதையும் அதற்கு செலவினம் மேற்கொண்டதையும் மன்றத்தின் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு– மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.1850/2020/எச்1)

14 தீர்மானிக்கப்பட்டது.



Scanned with CamScanner

மன்றப்பொருள் எண்.15.

மேலூர் நகராட்சிக்கு பாத்தியப்பட்ட காந்திஜி பூங்கா வணிக வளாக கடை எண்.19 திரு.முருகன் கடை எண்.12 திரு.அப்துல் சலீம் மற்றும் வாரச்சந்தை வணிக வளாக கடை எண்.21 திரு.வி.சுரேஷ் ஆகிய மூன்று கடைகளுக்கு நீண்ட நாட்களாக கேட்பு தொகை நிலுவையாக இருந்து வருகிறது. மேலும் மேற்படி கடைகளின் உரிமைதாரர்கள் விபரம் கண்டறிய இயலவில்லை. மேலும் மேற்படி கடைகளை நகராட்சி நிர்வாகத்தால் பூட்டி சீல் வைக்கப்பட்டு (டுடிஉம யனே ளநயட) தொடர்ந்து நகராட்சி வசம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் மேற்கடி கடைகளுக்கு தொடர்ந்து கணனியில் கேட்பு எழுப்பப்பட்டு நீக்கம் செய்யப்படாமல் உள்ளது. எனவே கீழ்க்கண்ட விபரப்படி உள்ள கடைகளுக்கு கணினியில் இருந்து கேட்பு தொகையை நீக்கம் செய்யவும் நகராட்சி நிர்வாகத்தால் பூட்டி சீல் வைக்கப்பட்டுள்ள கடைகளை பொது ஏலப்பட்டியல் சேர்த்து பொது ஏலம் விட நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | கடை/வரிவிதிப்பு எண் | வாடகைதாரரின் பெயர் | வருடம் | தொகை |
|---|---|---|---|---|
| 1. | 19/116/2007041 | கே.முருகன் | 2016–2017 முதல் 2017–2018 வரை | 105807/– |
| 2. | 12/116/2007036 | அப்துல் சலீம் | 2016–2017 முதல் 2018–2019 வரை | 100427/– |
| 3. | 21/116/2007060 | சுரேஷ் | 2015–2016 முதல் 2019–2020 முடிய | 125957/– |

மேற்படி கடைகளின் உரிமையாளர்களை கண்டறிய இயலாத காரணத்தாலும் நகராட்சி நிர்வாகத்தால் பூட்டி சீல் வைக்கப்பட்டு கையகப்படுத்தப்பட்டுள்ள கடைகளை பொது ஏலப்பட்டியல் சேர்த்து பொது ஏலம் விட நடவடிக்கை மேற்கொள்ளளவும் கணிணியிலிருந்து டேட்பு நீக்கம் செய்யவும் இதனால் நகராட்சிக்கு ஏற்படும் நிதியிழப்பை இழப்பெனக் கருதாமல் இருக்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2028/2016/அ2

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
மேலூர் நகராட்சி.



15

அனுமதிக்கப்பட்டது.

Scanned with CamScanner